GRAND LAUNCH OF "TN-RISE" WOMEN START-UP COUNCIL
Presided by
Thiru. Udhayanidhi Stalin
Hon'ble Minister for Youth Welfare, Sports Development, Special Programme Implementation & Poverty Alleviation Programme and Rural Indebtedness

தமிழ்நாடு ஊரகத் தொழில் காப்பு – புத்தொழில் உருவாக்கு நிறுவனம்: அமைச்சர் உதயநிதி துவக்கினார்

சென்னை, ஜூலை 3–

சென்னைகிண்டி தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனம் மற்றும் நிர்வாக அலுவலகத்தை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இதற்கான நிகழ்ச்சி, கிண்டியில் உள்ள தனியார் நட்சத்திர ஓட்டலில் நடந்தது. தொடர்ந்து, இந்த நிறுவனத்தின் இலச்சினை மற்றும் இணையதளத்தை தொடங்கி வைத்தார். பின்னர், மகளிர் சுய உதவிக்குழுவினரின் அரங்குகளை பார்வையிட்டார். இதேபோல, மகளிர் தொழில் முனைவோருக்கு தேவையான சேவைகளை வழங்கும் வகையில் பல நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:– தி.மு.க. அரசு அமைந்தபோது அண்ணா முதன் முதலில் பெண்களுக்கு சுயமரியாதை திருமண சட்டத்திற்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் அளித்தார். கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது பெண்களுக்கு சொத்தில் சம உரிமை போன்ற முற்போக்கு சட்டத்தை தந்தார். நம்முடைய முதலமைச்சரும் பெண்களுக்காக கட்டணமில்லா பஸ் பயண திட்டம், ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ரூ,1,000 உரிமைத்தொகை வழங்கும் திட்டம் போன்ற மகளிர் வளர்ச்சிக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளார். விளிம்பு நிலை மக்களை முன்னேற்றுவதற்காக தி.மு.க. அரசு பல்வேறு திட்டங்களை பார்த்து, பார்த்து நிறைவேற்றி வருகிறது. மகளிர் மேம்பாட்டிற்கான வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2.0 கிராமப்புற தொழில்களை ஊக்குவித்து வருகிறது.

மகளிரை தொழில் முனைவோர்களாக மாற்ற இந்த திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தியாவில் மகளிரால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்களில் 13.5 சதவீதம் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இதன் தொடர்ச்சியாகவே தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. தொழில் முனைவோராக வரும் மகளிருக்கு இது உறுதுணையாக இருக்கும். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக மகளிர் தொழில் முனைவோர்களும், தொழில் அதிபர்களும் இருக்கிறார்கள் என்ற வரலாற்று சாதனையை எட்ட நாம் அனைவரும் சேர்ந்து உழைப்போம் என்றார்.

தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்: மத்திய அமைச்சருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜூலை 3–

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்களுக்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் இடையூறுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று மத்திய அமைச்சருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு மு.க. ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:– சமீப வாரங்களில் இலங்கை கடற்படையினரால் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். கடந்த 1ம் தேதியன்று 2 மோட்டார் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளிலும், 2 பதிவு செய்யப்படாத மீன்பிடிப் படகுகளிலும் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 25 மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு உள்ளனர்.

1974ம் ஆண்டில் இருந்தே, அப்போதைய மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வை தொடர்ந்து இந்த பிரச்சினை நிலவுவதாக நீங்கள் உங்களின் 27.6.2024 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். தி.மு.க. தலைமையிலான மாநில அரசு, கச்சத்தீவு ஒப்பந்தத்தை அப்போது முழுவீச்சில் எதிர்த்தது. தி.மு.க. தனது எதிர்ப்பை தமிழ்நாடு சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது.

கச்சத்தீவு ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, அது சம்பந்தமாக மாநில அரசுடன் முறையாக கலந்தாலோசிக்கவில்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இந்திய மீனவர்களின் உரிமைகளுக்கும், நலன்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் வகையிலும், அவற்றைப் பறிக்கும் வகையிலும் கச்சத்தீவை முழுமையாக இலங்கைக்கு விட்டுக் கொடுத்தது அப்போதைய மத்திய அரசுதான்.

தேர்தல் முழக்கமாக பயன்படுத்துகிறது

அப்போதைய தி.மு.க. தலைவர் கருணாநிதி, இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் ஒரு பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்திருந்தார். அதில், 'மத்திய அரசு மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் அரசியலமைப்பிற்கு முரணானதாக இருக்கும் போது, கச்சத்தீவின் இறையாண்மையை ஒரு தீர்க்கப்பட்ட விஷயம் என்று கூற முடியாது' என்று திட்டவட்டமாக கூறியுள்ளார்.

பா.ஜ.க. தலைமையிலான அரசு தொடர்ந்து 3வது முறையாக ஆட்சியில் இருந்தாலும், இந்த பிரச்சினையை தேர்தல் நேர முழக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தி வருகிறது. கச்சத்தீவை மீட்க குறிப்பிடத்தக்க அர்த்தமுள்ள எந்த முயற்சியையும் அது எடுக்கவில்லை.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களுக்கு நிரந்தரத் தீர்வு காண்பது காலத்தின் கட்டாயமாகும். எனவே, தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை நிலைநாட்டும் வகையில், மீனவர்களுக்கு தொடர்ந்து இடையூறு விளைவித்து வரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண தேவையான, உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

यूनियन बैंक ऑफ इंडिया Union Bank of India

சொத்து மீட்பு கிளை
எண்.249/3ஆர்டி, முதல் தளம், பிரதான சாலை, எஸ்.ஆர். நகர்,
ஐதராபாத் 500 038. தெலுங்கானா
மின்னஞ்சல் : ubino556009@unionbankofindia.bank

கடன்தாரருக்கு விற்பனை பற்றி தெரிவிக்கும் அறிவிப்பு (30 நாட்கள் அறிவிப்பு)
கடனீட்டுச் சொத்து (அமலாக்க) விதிகள், 2002–ன் விதிகள் 6(2)/8(6)
2002ம் ஆண்டு நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை மீட்பதற்காக சொத்துக்களை விற்பனை செய்தல்.

ஈடுபெற்ற கடன் அளித்தவரான யூனியன் பேங்க் ஆப் இந்தியா, சொத்து மீட்புக் கிளை, ஐதராபாத், நிதிச் சொத்துக்களைப் பத்திரப்படுத்துதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் பாதுகாப்பு நல அமலாக்கம் சட்டம் 2002ன் பிரிவு 13(2)ன் கீழ் ஒரு கோரிக்கை அறிவிப்பின் மூலம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் நிலுவைத் தொகையை செலுத்துமாறு உங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தது. குறிப்பிட்ட காலத்திற்குள் நீங்கள் அந்த அறிவிப்பிற்கு இணங்கத் தவறியதால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, சட்டத்தின் 13(4) பிரிவு மற்றும் கடனீட்டுச் சொத்து (அமலாக்க) விதிகள், 2002–ன் விதிகள் 6/8ன் கீழ் ஈடுபெற்ற சொத்துக்களை கையகப்படுத்தியுள்ளார்.
ஈடுபெற்ற சொத்தை கையகப்படுத்திய பிறகும், நீங்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தவில்லை. எனவே, இந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு ஆன்லைன் முறையில் பொது மின்ஏலத்தை நடத்துவதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை விற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மின் ஏலத்தின் தேதி மற்றும் நேரம் மற்றும் சொத்தின் ரிசர்வ் விலை மற்றும் மின் ஏலத்தை நடத்தும் சேவை வழங்குநரின் விவரங்கள், தனித்தனியாக உங்களுக்குத் தெரிவிக்கப்படும். எனவே, நீங்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை, விற்பனை அறிவிப்பு வெளியிடப்படும் தேதிக்கு முன், வங்கியால் ஏற்பட்ட வட்டி, செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் சேர்த்து செலுத்தும்பட்சத்தில், சொத்து விற்பனைக்கு மேலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது, சட்டத்தின் பிரிவு 13 (8) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி உங்கள் சொத்தை நீங்கள் மீட்டுக் கொள்ளலாம்.

கடன்தாரர்: M/s. பாலாஜி கலர் லேபரட்டரீஸ், A33, சாலை எண்.2 ஃபிலிம் நகர், ஜூப்ளி ஹில்ஸ், ஐதராபாத், **பங்குதாரர்கள் / உடன் கடன்தாரர்கள் / உத்தரவாததாரர்கள்:** 2 (ஏ) திரு. எஸ் ரமேஷ் பாபு த/பெ. சத்யராம மூர்த்தி, 39/6, பிருந்தாவன் பார்க், தணிகாச்சலம் சாலை, தி நகர் சென்னை 600017, 2(பி). திருமதி. எஸ் வித்யாதாரி, 39/6, பிருந்தாவன் பார்க், தணிகாச்சலம் சாலை, தி நகர் சென்னை 600017, 2(சி). திரு. சி. கல்யாண், த/பெ. கோட்டையா நாயுடு, மனை எண்.318, வீட்டு எண்.G1, சாலை எண்.5, ஜூப்ளி ஹில்ஸ், ஐதராபாத் 500033, 2(டி). திரு. எம்விஎம்ஜி அப்பா ராவ், சி1-105, ஆர்எம்வி கிளஸ்டர்ஸ், லோல்ட்கலஹள்ளி, பெங்களூர் 560094, 2(இ). திரு டி.ரமேஷ் த/பெ. பாப்பா ராவ், பிளாட் எண்.டி & இ ரஞ்சனாஸ் பார்க், பானுமதி ராமகிருஷ்ணா, சாலிகிராமம், சென்னை 600093, 2(எப்). திரு. சிஎச் சேகர், 3, வால்மீகி தெரு, காந்திநகர், சாலிகிராமம், சென்னை 600093, 2(ஜி). திரு. டி பரந்தாமன், 5, 1வது தெரு, கற்பகம் அவென்யூ, ஆர்ஏ புரம் சென்னை 600093. உத்தரவாததாரர்: 2(எச்). திரு. எம். ராஜா ரத்னா, க/பெ. எம்விஎம்ஜி அப்பா ராவ், சி1-105, ஆர்எம்வி கிளஸ்டர்ஸ், லோல்ட்கலஹள்ளி, பெங்களூர் 560094

கோரிக்கை அறிவிப்பு தேதி : 16.05.2012 **சுவாதீன அறிவிப்பு தேதி :** 11.09.2012

அட்டவணைச் சொத்து

திரு. எஸ் ரமேஷ் பாபுவுக்கு சொந்தமான சொத்து
சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்.25ல் உள்ள 2400 சதுர அடி மற்றும் மனை எண்.34ல் உள்ள 2480 சதுர அடி. மொத்த விஸ்தீரணம் 4880 சதுர அடி. சர்வே எண்.66, அருணகிரி தெரு, ஸ்ரீ காமகோட்டி நகர் இணைப்பு, வளசரவாக்கம், சென்னை என்ற முகவரியில் உள்ளது. திரு. எஸ் ரமேஷ் பாபுவுக்கு சொந்தமான சொத்தின் மனை எண்.34ன் எல்லைகள்: வடக்கு: புல எண்.25, தெற்கு: 30 அடி சாலை, கிழக்கு: புல எண்.35, மேற்கு: புல எண்.33, மனை எண்.25ன் எல்லைகள்: வடக்கு: 30 அடி சாலை, தெற்கு: புல எண். 34, கிழக்கு: புல எண்.24, மேற்கு: புல எண்.26.

இடம் : ஐதராபாத்
தேதி : 2.7.2024
ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
யூனியன் பேங்க் ஆப் இந்தியா

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)
SHRIRAM Finance
Corporate Identity No. (CIN) : L65191TN1979PLC007874
கார்ப்பரேட் அலுவலகம்: வொக்கார்ட் டவர்ஸ், லெவல் 3, வெஸ்ட் விங், சி2, ஜி பிளாக், பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை 400051
பதிவு அலுவலகம்: ஸ்ரீ டவர்ஸ், மனை எண் 14ஏ, சவுத் பேஸ், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை 600 032, தமிழ்நாடு, இந்தியா
Tel No: +91 44 4852 4666 Fax: +91 44 4852 5666
Website: www.shriramfinance.in Email id: secretarial@shriramfinance.in

காணொலி காட்சி (VC)/பிற ஆடியோ சாதனங்கள் (OAVM) மூலம் ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்டின் 45வது வருடாந்திர பொதுக்கூட்டம், புத்தகம் மூடல் மற்றும் ஈவுத் தொகை

கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் ('MCA சுற்றறிக்கைகள்') வெளியிடப்பட்ட ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.17/2020, மே 5, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 20/2020, ஜனவரி 13, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 02/2021, டிசம்பர் 8, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.19/2021, டிசம்பர் 14, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.21/2021, மே 05, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.02/2022 மற்றும் டிசம்பர் 28, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.10/2022 மற்றும் செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.09/2023 மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013ன் ('சட்டம்') பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழுள்ள விதிகள் மற்றும் செக்யூரிட்டீஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 ன்படி ("செபி பட்டியல் கட்டுப்பாடுகள்) ஜூன் 1, 2024 தேதியிட்ட அறிவிப்பில் கண்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்களை செயல்படுத்த ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்டின் (கம்பெனி) 45வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) செவ்வாய்க்கிழமை, ஜூலை 30, 2024 அன்று மதியம் 2.00 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொலி காட்சி('VC')/பிற ஆடியோ சாதனங்கள் ('OAVM') மூலமாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. எனவே, ஒரு பொது இடத்தில் உறுப்பினர்கள் நேரில் ஆஜராக வேண்டிய தேவையில்லை. சட்டப் பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடுவதற்காக VC/OAVM மூலமாக பங்கேற்கும் உறுப்பினர்கள் கணக்கிடப்படுவார்கள். வருடாந்திர பொதுக்கூட்டம் கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெறும்.

1. MCA சுற்றறிக்கைகள் மற்றும் அக்டோபர் 7, 2023 தேதியிட்ட SEBI/HO/CFD/CFD-PoD-2/P/ CIR/2023/167 ('செபி சுற்றறிக்கை') ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அடங்கிய 2023–24 நிதி ஆண்டுக்கான ஆண்டறிக்கையின் மின்னணு நகல்கள் கம்பெனி/ கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் இன்டக்ரேட்டட் ரிஜிஸ்திரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் ("ஆர்டிஏ")/ டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் (டிபி) மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். மேலே குறிப்பிட்டுள்ள MCA சுற்றறிக்கைகள் மற்றும் SEBI சுற்றறிக்கையின்படி வருடாந்திர அறிக்கையின் காகித நகல்களை அனுப்புவது கைவிடப்பட்டுள்ளது.
வருடாந்திர அறிக்கையின் நகலைப் பெற விரும்பும் எந்தவொரு உறுப்பினரும், போலியோ எண்/ டிபி ஐடி மற்றும் கிளையன்ட் ஐடியைக் குறிப்பிட்டு, secretarial@shriramfinance.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அதற்கான கோரிக்கையை அனுப்பலாம்.
2. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அடங்கிய 2023–24 நிதி ஆண்டுக்கான ஆண்டறிக்கை கம்பெனியின் இணையதளம் www.shriramfinance.in, ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்கள் அதாவது பிஎஸ்இ லிமிடெட் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் ('சிடிஎஸ்எல்') இணையதளம் https://www.evotingindia.com–லும் கிடைக்கும்.
3. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மீது உறுப்பினர்கள் அவர்களின் வாக்குகளை மின்னணு வாக்குப் பதிவு முறையில் செலுத்தும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாமல் மின்னணு முறையில் மற்றும் காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் தொலைதூர வாக்களிக்கும் (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) முறையில் வாக்களிப்பது குறித்த விவரங்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்த விவரங்கள் கம்பெனியின் இணையதளம் www.shriramfinance.in மற்றும் சிடிஎஸ்எல் இணையதளம் https://www.evotingindia.com-ல் கிடைக்கும். மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிப்பதற்கான வசதி வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கிடைக்கும். மேலும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர் ஏற்கனவே தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் அவர்களின் வாக்குகளை அளிக்காத நிலையில் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கலாம்.
4. தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிப்பதற்கான லாகின் சான்றுகள் தனிநபர் அல்லாத உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் கிடைக்கும். நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் (என்எஸ்டிஎல்) மற்றும் சிடிஎஸ்எல்-ல் பங்குகளை வைத்துள்ள தனிநபர் உறுப்பினர்கள் என்எஸ்டிஎல் மற்றும் சிடிஎஸ்எல் இணையதளத்தில் லாகின் செய்து தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு காலத்தில் வாக்களிக்கலாம். மின்னணு கணக்கு / போலியோவில் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பிக்காத உறுப்பினர்கள், கம்பெனி/பங்கு பரிமாற்ற முகவரின் மின்னஞ்சல் முகவரி: secretarial@shriramfinance.in / einward@integratedindia.in–க்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம், தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணைப் பதிவு செய்து கொள்ளலாம்.
5. உறுப்பினர்கள் VC/OAVM மூலம் கூட்டத்தில் பங்கேற்க www.evotingindia.com என்ற இணையதள முகவரியில் லாகின் செய்து பங்கேற்க வேண்டும். மேலும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு காலத்தில் வாக்களிக்காத நிலையில் அவர்கள் இதன்மூலம் வாக்களிக்கலாம்.
6. சட்டப் பிரிவு 91 மற்றும் செபி பட்டியல் கட்டுப்பாடுகள் 42ன் கீழ் வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் இறுதி ஈவுத்தொகை வழங்கும் நோக்கத்திற்காக கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் புதன்கிழமை, ஜூலை 25, 2024 முதல் செவ்வாய்க்கிழமை, ஜூலை 30, 2024 வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.
7. ஏப்ரல் 26, 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில், 2023–24 நிதியாண்டில், முழுவதும் செலுத்தப்பட்ட தலா ரூ.10/– முகமதிப்பு கொண்ட ஒரு சம பங்கிற்கு ரூ.15/– (அதாவது 150%) இறுதி ஈவுத்தொகையாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இறுதி ஈவுத்தொகை, வருடாந்திர பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களால் அறிவிக்கப்பட்டால், ஆகஸ்ட் 28, 2024 அன்று அல்லது அதற்கு முன் மின்னணு முறையில், பதிவுத் தேதியான செவ்வாய்க்கிழமை, ஜூலை 23, 2024 அன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது கம்பெனியின் சம பங்குகளின் நன்மை பயக்கும் உரிமையாளர்களுக்கு வரியை பிடித்துக் கொண்டு செலுத்தப்படும்.
8. ஈவுத்தொகைக்கான பதிவு தேதி அல்லது அதற்கு முன் உறுப்பினர்கள் தங்கள் முழு வங்கிக் கணக்கு விவரங்களையும் einward@integratedindia.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் அவர்களின் டெபாசிட்டரிகளுடன் (பங்குகள் மின்னணு முறையில் இருக்கும்பட்சத்தில்) மற்றும் கம்பெனி/ ஆர்டிஏ உடன் (பங்குகளை காகித வடிவில் வைத்திருக்கும்பட்சத்தில்) புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்
9. நிதிச் சட்டம், 2020–ல் திருத்தப்பட்ட வருமான வரிச் சட்டம், 1961–ன்படி ஏப்ரல் 1, 2020க்குப் பிறகு ஒரு கம்பெனியால் செலுத்தப்படும் அல்லது வினியோகிக்கப்படும் ஈவுத்தொகைக்கான வரி உறுப்பினர்களிடம் இருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவும். எனவே கம்பெனி வழங்கும் ஈவுத்தொகையிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களில் வரியை (TDS) பிடித்தம் செய்யும். வருமான வரிச் சட்டம், 1961ன் பொருந்தக்கூடிய விதிகளின்படி உறுப்பினர்களின் குடியிருப்பு நிலை மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் கம்பெனியில் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களைப் பொறுத்து TDS விகிதங்கள் மாறுபடும். இது சம்பந்தமாக, மின்னஞ்சல் முகவரியை கம்பெனி/டெபாசிட்டரிகளில் பதிவுசெய்துள்ள உறுப்பினர்களுக்கு தேவையான இணைப்புகளுடன் பரிந்துரைக்கப்பட்ட விகிதத்தில் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும் ஈவுத்தொகையிலிருந்து வரியை நிறுத்திவைக்கும் செயல்முறையை விளக்கி மின்னஞ்சல் அனுப்பும்.
10. அனைத்து நிறுவனங்களும் டெபாசிட்டரிகளால் வழங்கப்பட்ட வங்கிக் கணக்கு விவரங்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு ஈவுத்தொகையை மின்னணு முறையில் செலுத்துவதற்கு ஆர்டிஏ-ஆல் பராமரிக்கப்படும் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்துவதை செபி கட்டாயமாக்கியுள்ளது. ஏப்ரல் 1, 2024 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், காகித வடிவில் உள்ள பங்குகளுக்கு ஈவுத்தொகை உட்பட எந்தவொரு தொகையும் தேவையான KYC விவரங்களைப் பதிவுசெய்த பிறகு மட்டுமே மின்னணு முறையில் வழங்கப்படும்.

இயக்குனர்கள் குழு உத்தரவுப்படி
ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
U. பாலசுந்தரராவ்
கம்பெனி செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி

இடம் : மும்பை
தேதி : ஜூலை 2, 2024

பெயர் மாற்றம்

நான்
Vinayak Premachandran Kalathil
த/பெ. Premachandran
பிறந்த தேதி 10.02.1991
விலாசம் எண்:21, AGAROAD, 3rd Lane, Old Washermenpet
Chennai-600019
இனிமேல் நான்
VINAYAK PREMACHANDRAN
என்று அழைக்கபடுகிறேன்
Vinayak Premachandran Kalathil

CHANGE OF NAME

I, C.J. THARUN KUMMAR, son of Thiru S.D. Chandrasekar, born on 12th November 1994, (District of Birth: Chennai) residing at No. 3-1-5, East Street, Ayikudi, Tirunelveli-627 852, Shall henceforth be known as
C.J. THARUN KUMAR

C.J. THARUN KUMMAR

பெயர் மாற்றம்

Old Given Name: DEVI,
Old Surname: SAKTHIVEL
க/பெ.R.சக்திவேல்
பிறந்த தேதி: 06.01.1981
பிறந்த மாவட்டம்: நாகர்கோவில், கன்னியாகுமரி
வசிப்பிடம் பழைய எண்.4, புதிய எண்.9, வேல்முருகன் தெரு, காமகோடி நகர், வளசரவாக்கம், சென்னை - 600 087
இனி முதற்கொண்டு
New Given Name: DEVI
New Surname: MURUGESAPERUMAL
என்று அழைக்கப்படுவேன்.
(தந்தை பெயர்: முருகேசபெருமாள்)
M.DEVI

மாண்புமிகு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பாக, சென்னை
C.C.No: 94/2022க்கு
எதிராக
F.A.No: 296 /2024
(காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் உள்ள மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையத்தின் கோப்பில் உள்ளது)

பெறுநர்
திரு.விஜய் கிருஷ்ணன், கிளை மேலாளர்,
M/s. ஜென்பி ஈவென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்
கிளை அலுவலகம்: மிலேனியம் டவர்ஸ், எண். 146, நெல்சன் மாணிக்கம் சாலை, மேத்தா நகர், அமிஞ்சிக்கரை சென்னை,
தமிழ்நாடு 600029.

ஐயா,

பொருள் : மாண்புமிகு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை, C.C.No: 94/2022க்கு எதிராக F.A.No: 296 /2024 - திரு. ராஜேஷ் குப்தா - மேல்முறையீடு செய்தவர் எதிராக மோகன்ராஜ் ரவிசங்கர் மற்றும் 6 பேர் - பிரதிவாதிகள்

24.06.2024 அன்று விசாரணைக்கு வந்த மேற்படி மேல்முறையீட்டிற்கு மேல்முறையீட்டாளர் முன்னுரிமை அளித்ததை எதிர்த்து 11/10/2023 அன்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட சி.சி. எண்.94/2022 புகாருக்கு எதிராக 7வது எதிர் தரப்பால் முன்னுரிமை மேல்முறையீட்டில், மாண்புமிகு மேல்முறையீட்டு மன்றம் 22/07/2024 அன்று தாங்கள் ஆஜராகுமாறு பத்திரிக்கையில் அறிவிப்பை வெளியிடுமாறு உத்தரவிட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள மேல்முறையீட்டை கவனத்தில் கொண்டு, 22/07/2024 அன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ தாங்கள் ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள் அல்லது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது, நீங்கள் இல்லாத நிலையில், மாண்புமிகு மன்றம் நீங்கள் இல்லாமலேயே வழக்கைத் தொடரும்.

M/s. ஸ்வராஜ் அசோசியேட்ஸ்-க்காக
எம்.பி.ராஜேந்திரன், வழக்கறிஞர்,
மேல்முறையீட்டாளருக்கான வழக்கறிஞர்.

இ - ஏல அறிவிப்பு
(சேதமடைந்த பல்வேறு கெமிக்கல்கள் மற்றும் இதர பொருட்கள்)

M/s. கைலாஷ் ஷிப்பிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், விற்பனை கிடங்கு 1 & 2, எண்.72/6, வைகாடு கிராமம், ரெட்ஹில்ஸ் சாலை, ஆண்டார்குப்பம், மணலி செக்போஸ்ட், சென்னை 600 068க்கு சொந்தமான சேதம் அடைந்த பல்வேறு கெமிக்கல்கள் மற்றும் இதர பொருட்கள் (சாஹு ஐஎஸ் & எல்எ பிரைவேட் லிமிடெட்டால் ஆய்வு செய்யப்பட்டது) கண்டிப்பாக உள்ளது உள்ளவாறு நிலையில்" மொத்த அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. அதற்கான இ - ஏல படிவங்கள் விருப்பமுள்ள வாங்குபவர்களிடம் இருந்து வரவேற்கப்படுகின்றன. திரு. நிதின் - 8810331841 அவர்களிடம் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பொருட்களை 03.07.2024 முதல் 09.07.2024 வரை மேற்கண்ட முகவரியில் பார்வையிடலாம். இ - ஏலம் 10.07.2024 அன்று நடைபெறும். இ - ஏல படிவத்திற்கு திருமதி. குஷி சிங் அவர்களை 9990857386 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

சால்வர் செட்டிலர்ஸ் பிரைவேட் லிமிடெட்
(ஏலதாரர்கள்)
முகவரி: 203, 2வது தளம், உஷா கிரண் பில்டிங், ஆசாத்பூர் வணிக வளாகம், டெல்லி110033 அல்லது www.salvorsettlers.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவும். இ - ஏலப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 10/07/2024 மதியம் 12.30 மணிக்கு முன்.

கோத்தாரி சேஃப் டெபாசிட்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: "கோத்தாரி பில்டிங்ஸ்"
116, மகாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600034.
தொலைபேசி எண். 044-28331999, இணையதளம்: www.hckotharigroup.com/ksdl.
மின்னஞ்சல் முகவரி : kotharisafedeposits@gmail.com
CIN: U65921TN1936PLC001424

நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்ட டிசம்பர் 28, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 10/2022 உடன் மே 05, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.02/2022 உடன் டிசம்பர் 14, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.21/2021 உடன் ஜனவரி 13, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.02/2021 உடன் மே 05, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.20/2020, ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.14/2020 உடன் ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.17/2020 ஆகியவை ஒரு பொதுவான இடத்தில் கூட்டத்திற்கு உறுப்பினர்களின் நேரடி வருகை இல்லாமல் காணொளி காட்சி (VC) அல்லது பிற ஆடியோ காட்சி முறை (OAVM) மூலம் நிறுவனத்தின் வருடாந்திர பொதுக் கூட்டத்தை நடத்த அனுமதிக்கிறது. மேற்படி சுற்றறிக்கைகளின் அடிப்படையில் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013–ன் விதிகளுக்கு இணங்க, நிறுவனத்தின் வருடாந்திர பொதுக் கூட்டம் VC/OAVM மூலம் **ஆகஸ்ட் 11, 2023 வெள்ளிக்கிழமை மதியம் 2.00 மணிக்கு** நடைபெறுகிறது. எனவே, உறுப்பினர்கள் VC/OAVM மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம். VC/OAVM மூலம் கூட்டத்தில் பங்கேற்பதற்கான விரிவான செயல்முறை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது அது 2022–23–ம் ஆண்டு அறிக்கையுடன் பங்குதாரர்களுக்கு இணைக்கப்பட்டுள்ளது. 2022–23–ம் ஆண்டு அறிக்கையை மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் இணையதளத்தில் அணுகலாம். நிறுவனத்தில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த பங்குதாரர்களுக்கு வருடாந்திர அறிக்கையுடன் தனிப்பட்ட அறிவிப்பும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது. மேற்கண்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையை பெறுவதற்காக நிறுவனத்தில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் திரு. R.U. திரிவேதி அவர்களை அலுவலக நேரத்தில் +919381006446/044–28331999 என்ற எண்ணில் அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம். முறையான சரிபார்ப்புக்குப் பிறகு அவை அனுப்பப்படும்.

கோத்தாரி சேஃப் டெபாசிட்ஸ் லிமிடெட்
நினா பி கோத்தாரி
தலைவர்

இடம்: சென்னை 600 034
தேதி: 19 ஜூலை 2023

பொது அறிவிப்பு (படிவம் - A)
(இந்திய கடன் தீர்க்க வகையற்றோர் மற்றும் நொடிப்பு நிலை வாரியம் ஒழுங்கு விதி 6–ன் கீழ் (பெருநிறுவன நபர்கள் நொடிப்பு நிலை செயல்முறை தீர்மானம்) ஒழுங்கு விதிகள், 2016)

அர்ஜூன் கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் க்கு
கடனீந்தோர் கவனத்திற்கு

தொடர்புடைய விபரங்கள்

1.	பெருநிறுவனக் கடனாளர் பெயர்	அர்ஜூன் கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட்
2.	பெருநிறுவனக் கடனாளர் பதிவு செய்த நாள்	22.11.1989
3.	பெருநிறுவனக் கடனாளர் பதிவு செய்த அதிகார வகை	நிறுவனங்கள் பதிவாளர், சென்னை, தமிழ்நாடு
4.	பெருநிறுவனக் கடனாளரின் நிறுவன அடையாள எண் / வரையறு கடன் அடையாள எண்.	U24119TN1989PTC018374
5.	பெருநிறுவனக் கடனாளரின் பதிவு அலுவலகம் மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதேனுமிருப்பின்) முகவரி	பிளாட் நெ. 78-79, பேஸ் - II, சிப்காட் Indl காம்ப்ளக்ஸ், வேலூர், ராணிப்பேட்டை, தமிழ்நாடு, இந்தியா - 632 403. புத்தகங்கள் பராமரிக்கப்படும் இடம் : ராபர்ட் V சந்திரன் டவர், 2வது தளம், நெ. 149, வேளச்சேரி தாம்பரம் நெடுஞ்சாலை, பள்ளிக்கரணை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா - 600 100
6.	பெருநிறுவனக் கடனாளரின் நொடிப்பு நிலை வாங்கிய தேதி	உத்தரவு தேதி : 28.06.2024 உத்தரவு பெற்ற தேதி : 01.07.2024 (மின்னஞ்சல் மூலம்)
7.	நொடிப்பு நிலை தீர்மான நடைமுறைகள் முடிவுக்கு வரும் உத்தேசத் தேதி	25.12.2024, தீர்மான செயல்முறை தொடங்கப்பட்ட நாளிலிருந்து 180 நாட்கள்
8.	இடைக்கால தீர்மான தொழில்முறையாளரின் பெயர், முகவரி, மின்னஞ்சல் மற்றும் பதிவு எண் :	பெயர் : S.கண்ணன் முகவரி : ஸ்கை லைன் கேசில், நெ.27, முதல் தளம், அப்துல் ரசாக் வீதி, சைதாப்பேட்டை, சென்னை - 600015 மின்னஞ்சல் : charitarthkannan@gmail.com பதிவு எண் : IBBI/IPA-001/IP-P00755/2017-18/11287
9.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்டவாறு இடைக்கால தீர்மான தொழில் முறையாளரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	எண்.8-ல் உள்ளவாறு
10.	இடைக்கால தீர்மான தொழில் முறையாளரின் அஞ்சல் மற்றும் மின்னஞ்சல் முகவரி	பெயர் : S.கண்ணன் முகவரி : ஸ்கை லைன் கேசில், நெ.27, முதல் தளம், அப்துல் ரசாக் வீதி, சைதாப்பேட்டை, சென்னை - 600015 மின்னஞ்சல் : charitarthkannan@gmail.com
11.	உரிமைக் கோரிக்கைகள் சமர்ப்பிக்கக் கடைசி நாள்	12.7.2024
12.	இடைக்கால தீர்மான தொழில் முறையாளரால் உறுதி செய்யப்பட்டபடி, உட்கூறு (b), பிரிவு–21, உட்பிரிவு (6A) வின் கீழ் கடன் வழங்கியவர்கள் (யாராவது இருந்தால்)	NA
13.	கடன் வழங்கியவர்களின் அதிகாரப் பிரதிநிதிகளாக கண்டறியப்பட்ட நொடிப்பு நிலை நிபுணர்களின் பெயர்கள் வகைப்படுத்தப்பட்டபடி (ஒவ்வொரு வகைக்கும் 3 பெயர்கள்)	NA
14.	அ) சம்பந்தப்பட்ட படிவங்கள் மற்றும் ஆ) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் விவரங்கள் கிடைக்குமிடம்	NA

மாண்பமை தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், அர்ஜூன் கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு எதிராக 28.06.2024-ல் பெறுநிறுவன நொடிப்பு நிலை தீர்மான செயல்முறை நடவடிக்கைகளை துவக்க உத்தரவிட்டுள்ளதென அறிவிக்கப்படுகிறது. 01.07.2024 அன்று மின்னஞ்சல் மூலம் இடைக்காலத் தீர்மான தொழில்முறையாளருக்கு உத்தரவு வழங்கப்பட்டது.
அர்ஜூன் கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குக் கடன் கொடுத்தோர், தங்களது உரிமைக் கோரிக்கைகளுக்கான முறையான அத்தாட்சியுடன் மேலே வரிசை எண்.10-ல் குறிப்பிட்டுள்ள இடைக்காலத் தீர்மான தொழில்முறையாளரின் முகவரிக்கு 12.07.2024 அன்றோ, அதற்கு முன்னரோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
நிதி பற்றாளர்கள் தங்கள் உரிமைக் கோரிக்கைகளுக்கான ஆதாரத்தை மின்னஞ்சல் மூலம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். பிற அனைத்துப் பற்றாளர்களும் தங்களது உரிமைக் கோரிக்கைகளுக்கான ஆதாரத்தை நேரில் அல்லது அஞ்சல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்கலாம்.
தவறான கூற்று மற்றும் தவறான ஆதாரங்களை சமர்ப்பித்தல் அபராதங்களுக்கு வழிவகுக்கும்.

CA S.கண்ணன்
இடைக்காலத் தீர்மான தொழில்முறையாளர்
IBBI/IPA-001/IP-P00755/2017-18/11287

இடம் : சென்னை
தேதி : 02.07.2024

Redington

ரெடிங்டன் லிமிடெட்
(முன்னர் ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்)
CIN: L52599TN1961PLC028758
பிளாக் 3, பிளாத்தின், ரெடிங்டன் டவர், இன்னர் ரிங் ரோடு,
சரஸ்வதி நகர் மேற்கு, 4வது தெரு, புழுதிவாக்கம், சென்னை 600091.
Email: investors@redingtongroup.com I Website: www.redingtongroup.com
Telephone No: +91-44-42243363 I CIN: L52599TN1961PLC028758

காணொளி காட்சி அல்லது பிற ஒலி ஒளி சாதனங்கள் மூலம் இறுதி ஈவுத்தொகை மற்றும் பிற விஷயங்கள் குறித்து நடத்தப்படும் 31வது வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய தகவல்

கம்பெனிகள் சட்டம், 2013 (''சட்டம்'') மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் பொருந்தக்கூடிய விதிமுறைகளுடன், கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் (MCA) செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட பொது சுற்றறிக்கை 09/2023 மற்றும் செபி சுற்றறிக்கை எண். அக்டோபர் 07, 2023 தேதியிட்ட SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 (இனிமேல் கூட்டாக "சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்டம் கூட்டுவதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களை பரிவர்த்தனை செய்ய கம்பெனியின் 31வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) செவ்வாய்கிழமை, ஜூலை 30, 2024 அன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளி காட்சி('VC')/பிற ஒலி ஒளி சாதனங்கள் ('OAVM') மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

1. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு உள்ளிட்ட 2023–24–ம் நிதி ஆண்டுக்கான ஆண்டறிக்கை ஆகியவை டெபாசிட்டரி பங்கேற்பாளர்(கள்)/கம்பெனி பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் (ஆர்டிஏ) மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு வடிவில் அனுப்பப்படும். எவ்வாறாயினும், செபியின் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 31வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையின் காகித நகல், agm@cameoindia.com அல்லது investos@redingtongroup.com ஆகிய மின்னஞ்சல் மூலம் அவர்களின் ஃபோலியோ விவரங்கள்/ வாடிக்கையாளர் ஐடி ஆகியவற்றை குறிப்பிட்டு அதைக் கோரும் உறுப்பினர்களுக்கு அவை அனுப்பப்படும். மேற்கண்ட ஆவணங்கள் கம்பெனியின் வலைதளம் www.redingtongroup.com, பங்கு சந்தையின் வலைதளங்கள் அதாவது பிஎஸ்இ லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com மற்றும் NSDL's வலைதளம் www.evoting.nsdl.com ஆகியவற்றில் கிடைக்கும்.
2. அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களின் மீதான வாக்களிக்கும் உரிமையானது, கட்ஆஃப் தேதி, அதாவது ஜூலை 24, 2024 புதன்கிழமை அன்று, நிறுவனத்தின் செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்கு மூலதனத்தின் உறுப்பினர்களின் பங்குகளின் விகிதத்தில் இருக்கும். அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தீர்மானங்களுக்காகவும் அதன் உறுப்பினர்கள் அனைவருக்கும் தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி மற்றும் வருடாந்திர பொதுக் கூட்ட காலத்தில் மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்கும் வசதியை வழங்க கம்பெனி ஏற்பாடு செய்துள்ளது. இது தொடர்பான விரிவான வழிமுறைகள் அறிவிப்பில் கிடைக்கும். உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்க மற்றும் VC/OAVM மூலம் பங்கேற்பதற்கான உள்நுழைவு விவரங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்.
3. ஜூன் 4, 2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர்கள் குழு ஒரு பங்கு பங்குக்கு ரூ.6.20 என்ற இறுதி ஈவுத்தொகையை பரிந்துரைத்துள்ளது. வருடாந்திர பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களால் ஒருமுறை அங்கீகரிக்கப்பட்ட இறுதி ஈவுத்தொகை, ஜூலை 5, 2024 வெள்ளியன்று உறுப்பினர்களின் பதிவேட்டில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு கம்பெனியின் நடைபெறவிருக்கும் வருடாந்திர பொதுக் கூட்டத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் வழங்கப்படும்:
   - அ. முழுமையான மற்றும் சரியான வங்கி விவரங்களைப் புதுப்பித்த உறுப்பினர்களுக்கு பல்வேறு ஆன்லைன் பரிமாற்ற முறைகள் மூலம்
   - ஆ. முழு/சரியான வங்கி விவரங்களைப் புதுப்பிக்காத உறுப்பினர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு டிவிடெண்ட் வாரண்டுகள் / காசோலைகள் / டிமாண்ட் டிராப்ட்கள் / அது தொடர்பான மற்றவை அனுப்பப்படும்.
4. வருமான வரிச் சட்டம், 1961, நிதிச் சட்டம், 2020–ல் திருத்தப்பட்டபடி, கம்பெனி ஏப்ரல் 1, 2020 அல்லது அதற்குப் பிறகு செலுத்தப்பட்ட அல்லது வினியோகிக்கப்பட்ட ஈவுத்தொகையின் மூலத்தில் ('TDS') (பொருந்தக்கூடிய விகிதங்களில்) ஈவுத்தொகை செலுத்தும்போது அல்லது வரவு வைக்கும்போது வரியைக் கழிக்க வேண்டும். பங்குதாரரின் வகை மற்றும் குடியிருப்பு நிலை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களைப் பொறுத்து TDS விகிதம் மாறுபடும். உறுப்பினர்கள், ஜூலை 10, 2024 புதன்கிழமை அல்லது அதற்கு முன் https://investors.cameoindia.com/ல் நிறுவனத்தின் ஆர்டிஏ உடன் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். இந்தத் தேதிக்குப் பிறகு பெறப்படும் எந்தத் தகவல்களும் பெறப்பட்டதாக கருதப்படாது. விரிவான வரி விகிதங்கள், சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் கூடுதல் கேள்விகளுக்கு, நிறுவனத்தின் இணையதளத்தில் கிடைக்கும் டிவிடெண்டில் உள்ள டிடிஎஸ் பற்றிய பொதுத் தொடர்பு மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைப் பார்க்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
5. வருடாந்திர அறிக்கை, அறிவிப்பு, உள்நுழைவு விவரங்கள் மற்றும் ஈவுத்தொகையை சரியான நேரத்தில் பெறுவதற்கு, இதுவரை தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத அல்லது புதுப்பிக்காத உறுப்பினர்கள் பான், வங்கி ஆணை மற்றும் பிற தகவல்கள் ஏதேனும் இருந்தால், கீழே உள்ள வழிமுறைகளைப் பின்பற்றி உடனடியாக அதைப் பதிவு செய்யும்படி கம்பெனி கேட்டுக்கொள்கிறது.
   - அ. டிமெட்டீரியலைஸ் செய்யப்பட்ட முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், தங்கள் மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் மொபைல் எண்களை தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் புதுப்பிக்காமல் இருப்பவர்கள், தங்கள் டிமேட் கணக்குகளை பராமரிக்கும் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் அவர்களின் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களை பதிவு செய்ய/ புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
   - ஆ. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கம்பெனியில் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணைப் பதிவு செய்யாத/ புதுப்பிக்காதவர்கள், ஃபோலியோ எண் மற்றும் பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட நகலுடன் நிறுவனத்தின் RTAக்கு எழுதி பதிவு செய்ய/ புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
6. செபியின் மே 7, 2024 தேதியிட்ட முதன்மை சுற்றறிக்கை எண். SEBI/HO/MIRSD/POD-1/P/CIR/2024/37ன் கீழ் காகித வடிவில் பத்திரங்களை வைத்திருப்பவர்கள், ஃபோலியோ(கள்) பான், நியமனத் தேர்வு, தொடர்பு விவரங்கள், மொபைல் எண், வங்கிக் கணக்கு விவரங்கள் மற்றும் மாதிரி கையொப்பம் ஆகியவற்றுடன் புதுப்பிக்கப்படாவிட்டால், மேற்கூறிய அனைத்து விவரங்களையும் RTA க்கு முழுமையாக அளித்த பிறகு அத்தகைய ஃபோலியோக்களுக்கு ஈவுத்தொகை, வட்டி அல்லது மீட்டெடுப்பு உட்பட ஏதேனும் செலுத்த வேண்டிய தொகை ஆகியவை ஏப்ரல் 1, 2024 முதல் மின்னணு முறையில் மட்டுமே வழங்கப்படும். தங்கள் பான், கேஒய்சி விவரங்கள் (மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண் மற்றும் வங்கிக் கணக்கு விவரங்கள் உட்பட) பதிவு செய்யாத/ புதுப்பிக்கப்படாத உறுப்பினர்கள் மற்றும் ஈவுத்தொகையைப் பெறுவதற்கான காகித ஃபோலியோ விவரங்கள் தொடர்பான நியமனம், படிவம் ISR-1ஐ வங்கியின் விவரங்களுடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கணக்கு எண், கணக்கு வைத்திருப்பவரின் பெயர், கிளையின் பெயர், IFSC குறியீடு, உறுப்பினர் அல்லது முதல் உரிமையாளரின் பெயரைக் கொண்ட சுயசான்றளிக்கப்பட்ட நகல் ரத்து செய்யப்பட்ட காசோலையை RTA மூலம் நிறுவனத்தின் பதிவேடுகளில் பதிவு செய்யவும் அல்லது புதுப்பிக்கவும். நிறுவனத்தின் RTAஐத் தொடர்புகொள்ளலாம்:

M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்,
யூனிட் : ரெடிங்டன் லிமிடெட்,
சுப்பிரமணியன் பில்டிங்ஸ், 5வது தளம்,
எண்.1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை – 600 002,
தொலைபேசி எண்: 044 – 28460390,
ஆன்லைன் முதலீட்டாளர் போர்டல்: wisdom.cameoindia.com
இணையதளம்: www.camcoindia.com

ஏதேனும் கேள்விகள் இருந்தால், உறுப்பினர்கள் investors@redingtongroup.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். MCA மற்றும் SEBI இன் பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் உறுப்பினர்களின் தகவல் மற்றும் நன்மைக்காக மேற்கண்ட அறிவிப்பு வெளியிடப்படுகிறது. 2023-24ம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கையுடன் 31வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு, உரிய நேரத்தில் அவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு பொருந்தக்கூடிய சட்டங்களின்படி உறுப்பினருக்கு அனுப்பப்படும்.

ரெடிங்டன் லிமிடெட்டிற்காக
கே விஜயஷ்யாம் ஆச்சார்யா
கம்பெனி செயலாளர்

தேதி: ஜூலை 2, 2024
இடம்: சென்னை